International Association of Oil & Gas Producers

வேலை தொடங்கும் முன் சரிபார்ப்பு - SWC

ஆற்றல் மூலங்களை தனிமைப்படுத்துதல் (Energy Isolation)

எப்போது முடிக்க வேண்டும் - எந்தவொரு ஆற்றல் மூலங்களை **தனிமைப்படுத்தல்** நடவடிக்கைகளும் தொடங்குவதற்கு முன்

தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடும் / பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும் வேலை	ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
1 **வேலை செய்ய வேண்டிய மின்சுற்று (Circuit), அமைப்பு (System) அல்லது உபகரணம் (Equipment), ஐசலேஷன் திட்டம் (Isolation Plan) அல்லது வரைபடத்தில் (Drawing) தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.**	• ஐசலேஷன் திட்டம் அல்லது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்சுற்று(Circuit) அமைப்பு(System) அல்லது உபகரணத்தை குறிச்சொற்கள் (Tags) அல்லது அடையாளக் குறிகள் (Markings) மூலம் உறுதிப்படுத்தலாம்.		
2 **அபாயம் ஏற்படுத்தக்கூடிய அனைத்து சக்தி மூலங்களும் கண்டறியப்பட்டுள்ளன.**	• செய்யும் வேலைக்கு ஏற்ற ஆபத்து மதிப்பீடு(Risk Assessment) செய்யப்பட்டுள்ளத. • வேலை தொடங்கும் முன், பணிக்குழுவுடன் ஆபத்துகள் குறித்து பேசப்பட்டுள்ளது. • உபகரணங்களில் அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தி மூலங்கள் உள்ளனவா என சரிபார்க்கப்பட்டுள்ளது. • அருகில் இயங்கிக்கொண்டிருக்கும் உபகரணங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் கண்டறியப்பட்டு, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.		
3 **தனிமைப்படுத்தும் இடங்கள் (Isolation Points), திட்டம் அல்லது வரைபடத்தின் படி அடையாளம் காணப்பட்டுள்ளன**	• அனைத்து தனிமைப்படுத்தும் இடங்களும் சரியாக அமைக்கப்பட்டு, Tag அல்லது அடையாளக் குறியுடன் குறிக்கப்பட்டுள்ளன. • தேவைப்பட்டால் Isolation Diagram, P&ID அல்லது Flow Diagram பயன்படுத்தி சரிபார்க்கப்பட்டுள்ளது.		
4 **தனிமைப்படுத்தல் சாதனங்கள் (Isolation Devices), திட்டம் அல்லது வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட நிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன.**	• வால்வுகள் (Valves), வரைபடம் அல்லது திட்டத்தின் படி திறந்த அல்லது மூடிய நிலையில் உள்ளன. • பிளைண்ட் (Blind), ஸ்பேட் (Spade), ஸ்கில்லெட் (Skillet) ஆகியவை: – உபகரணத்தின் அழுத்த நிலைக்கு (Pressure Rating) ஏற்ற சான்றளிக்கப்பட்டவை. – வரைபடம் அல்லது திட்டத்தின் படி பொருத்தப்பட்டுள்ளன. • மின்சார தனிமைப்படுத்தல் இடங்கள் (Electrical Isolation Points) திறந்த நிலையில், அணைக்கப்பட்ட நிலையில் அல்லது மின் மூலத்திலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளன		
5 **Isolation Plan-ன் படி, தேவையான Lock மற்றும் Tag-கள் உபகரணங்களில் சரியாக பொருத்தப்பட்டுள்ளன.**	• அனைத்து தனிமைப்படுத்தல்களும் (Isolations) சரியாக செய்யப்பட்டு, Tag அல்லது அடையாளக் குறியுடன் குறிக்கப்பட்டுள்ளன. • தனிமைப்படுத்தும் இடங்களில் (Isolation Points) Lockout/Tagout சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. • சாவிகள் (Keys) பாதுகாப்பான, நியமிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டுள்ளன. **குறிப்பு:** • Lock பொருத்த முடியாத நிலையில் இருந்தால், அபாயகரமான சக்தி மூலங்கள் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டு, திட்டத்தின் படி பாதுகாப்பாக உறுதி செய்யப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்க்கவும்.		

6	**சக்தி எதுவும் இல்லாத நிலை (Zero Energy State) உறுதிப்படுத்தப்பட்டு, சோதித்து நிரூபிக்கப்பட்டுள்ளது.**	• மின்சாரம் அல்லது சக்தியால் இயங்கும் உபகரணங்களை இயக்க முயற்சி செய்து, அவை தொடங்க முடியாத நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • அமைப்புகளில் (குழாய்கள், கேஜ்கள் போன்றவை) மீதமுள்ள அல்லது சேமிக்கப்பட்ட சக்தி உள்ளதா என சோதிக்கப்பட்டுள்ளது. – சேமிக்கப்பட்ட சக்தி வெளியேற, Bleed மற்றும் Vent புள்ளிகள் திறந்த நிலையில் உள்ளனவா என சரிபார்க்கப்பட்டுள்ளது. – கேஜ்கள் (Gauges), அளவீட்டு கருவிகள் மற்றும் வோல்ட்மீட்டர்கள் (Volt Meters) மூலம் சரிபார்க்கப்பட்டுள்ளது. குறிப்பு: • சக்தி முழுமையாக இல்லாத நிலையை (Zero Energy) உறுதிப்படுத்த முடியாவிட்டால், வேலையை நிறுத்தவும். • மீதமுள்ள சக்தியால் ஏற்படும் ஆபத்தை கட்டுப்படுத்த தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செயல்பாட்டில் உள்ளனவா, சரியாக இயங்குகின்றனவா மற்றும் பராமரிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தவும்.		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். நிறுத்து ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

ஆற்றல் மூலங்களை தனிமைப்படுத்துதல் (Energy Isolation)

